
raisingchildren.net.au
the australian parenting website

# உள்ளிடப் பாதுகாப்பு: படங்களில்

PARENTING IN PICTURES

0 - 8 வயதில் பொருத்தமானது

## வீட்டுப் பாதுகாப்பு: நெருப்பு, மருந்து மற்றும் தண்ணீர்




புகை கண்டறிகருவிகளையும் பாதுகாப்பு சுவிட்சுகளையும் பொருத்துங்கள். அதிகபட்சமாக 50°C வெப்பநிலையில் சுடுநீர் அளிக்கப்படும் குளியலறைக் குழாய்களை வைத்திருங்கள்.





நெருப்புக்குச்சிகள் மற்றும் லைற்றர்கள், மருந்துகள் மற்றும் எண்ணெய்கள், சுத்தம்செய்யும் பொருட்கள் போன்ற வீட்டுபயோக நஞ்சுகள் முதலியவற்றைப் பாதுகாப்பாக சேமித்து, பாதுகாப்பாக உபயோகியுங்கள்.




குழந்தைகள் குளிக்கும் எல்லா நேரங்களிலும் மற்றும் குழந்தைகள் தண்ணீர் எதற்கும் அருகில் இருக்கும் போதும், கைக்கெட்டிய தூரத்திலேயே, அவர்களின் பார்வையிலேயே இருங்கள்.


## கதவு, யன்னல் மற்றும் படிக்கட்டின் பாதுகாப்பு



யன்னல்களிலும் கதவுகளிலும் **பாதுகாப்புக் கண்ணாடியைப்** பொருத்துங்கள் அல்லது பழைய வீடுகளின் யன்னல்கள் மற்றும் கதவுகளுக்கு உதிர்வதைத் தடுக்கும் படலத்தைப் பூசுங்கள். கண் மட்டத்தில் கண்ணாடி மீது ஸ்ரிக்கர்களை இடுங்கள்.




**யன்னல்களைப் பூட்டுங்கள்.** கதிரைகளையும் பிற பொருட்களையும் யன்னல்களிலிருந்து தூரமாக நகர்த்துங்கள். ரிவிகளைச் சுவர்களில் பொருத்துங்கள் அல்லது அவை உங்களுடைய குழந்தை மீது விழாத விதமாக அவற்றை வையுங்கள்.




படிக்கட்டுகளின் மேற்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும், மொட்டைமாடிகளின் நுழைவாயில்களிலும் பாதுகாப்புக் கதவுகளை வையுங்கள்.

## வீட்டில் நடக்கக்கூடிய தீங்குகள்



கூரான பொருட்களை, குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் சேமியுங்கள். உங்களுடைய குழந்தை விழுங்கக் கூடிய அல்லது தனது மூக்கு, காதுகள் அல்லது கண்களில் செருகக் கூடிய சிறிய பொருட்கள் உள்ளனவா என்று கவனியுங்கள்.



மறைவுத்தட்டிகளிலும் திரைச்சீலைகளிலும் உள்ள சங்கிகளையும் கயிறுகளையும் 5 செ.மீ நீளத்தை விடக் குறைவாக வைப்பதன் மூலம், நெரிக்கப்படுவதைத் தடுங்கள்.




**அவசரநிலையான இலக்கங்கள்** மற்றும் ஏனைய பயனுள்ள பாதுகாப்புத் தொடர்புகளை தொலைபேசிக்கு அருகில் பொருத்தி வையுங்கள். உங்களுடைய குழந்தைக்காக உங்களுடைய வீட்டைப் பாதுகாப்பானதாக ஆக்குவது பற்றிய மேலதிக உதவிக்குறிப்புகளைப் பெறுங்கள்.

Indoor safety in Tamil © 2019 Raising Children Network